# நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு

## ஊடகவியலாளர் பயிற்சி கற்கைநெறிகளுக்காக நிதி உதவி வழங்கல்

## அசிதிசி ஊடக புலமைப்பரிசில் செயற்றிட்டம் – 2018

### 01. நோக்கம்

- ✦ இலங்கை ஊடகவியலாளர்களின் தொழில் தன்மையை ஊக்குவித்தல்.

### 02. இலக்குக் குழு

- ✦ இலங்கையில் அங்கீகாரம் பெற்ற இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடக நிறுவனங்களில் முழுநேர அல்லது பகுதிநேர அடிப்படையில் சேவையாற்றும் ஊடகவியலாளர்கள்.
- ✦ சுதந்திர ஊடகவியலாளர்கள்.
- ✦ பிரதேச ஊடகவியலாளர்கள்
- ✦ வெப் ஊடகவியலாளர்கள்

### 03. தெரிவு செய்யப்படும் தேர்வுமுறை

- ✦ 3 வருட கால சேவையைப் பூர்த்தி செய்த மேற்படி 02ல் குறிப்பிடப்பட்ட ஊடகவியலாளர்களாயிருத்தல் வேண்டும்.
- ✦ நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் திகதி வரையில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் உயர்கல்வி பயிற்சி நிறுவனத்தினால் நடாத்தப்படும் ஊடகத் துறைக்குரித்தான பட்டப் பின்படிப்பு (முதுமாணி), பட்டதாரி, டிப்ளோமா, நீண்ட கால மற்றும் குறுகிய கால சான்றிதழ் கற்கைநெறிக்காக தெரிவு செய்யப்பட்டிருத்தல் அல்லது தற்போது கற்கைநெறியைக் கற்றுக்கொண்டிருப்பவராயிருத்தல் வேண்டும். (நேர்முகப் பரீட்சையின்போது கற்கை நெறிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளமை அல்லது கற்கை நெறியை கற்றுக்கொண்டிருப்பது தொடர்பான ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும்)
- ✦ விண்ணப்பிக்கும் கற்கை நெறி நேரடியாக ஊடகத் துறையோடு சம்பந்தப்பட்ட கற்கை நெறியாகவிருத்தல் வேண்டும்.
- ✦ 18 - 55 வயதிற்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- ✦ அரசாங்க தகவல் திணைக்களம் மூலம் ஊடகவியலாளர்களுக்காக வழங்கப்படும் அடையாள அட்டையைப் பெற்றிருத்தல்.
- ✦ ஊடகவியலாளர் ஒருவருக்கு இந்தப் புலமைப் பரிசில் திட்டத்தின் மூலம் இரண்டு முறை அனுகூலங்களைப் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பங்கள் கிடைக்கும் என்பதுடன் முதலாவது சந்தர்ப்பத்திற்கான தகுதியைப் பெற்று 5 வருடங்களின் பின்னரே இரண்டாவது சந்தர்ப்பத்திற்காக விண்ணப்பிக்க முடியும்.

### 04. பண உதவிகள் வழங்கல்

- ✦ கற்கை நெறியின் பொருட்டு வழங்கப்படும் பட்டதாரி மற்றும் பட்டப் பின்படிப்புக்கான அதிகூடிய புலமைப் பரிசில் தொகை இரண்டு இலட்சம் ரூபா (200,000/-) மற்றும் நீண்டகால மற்றும் குறுகியகால சான்றிதழ் கற்கை நெறியின் பொருட்டு வழங்கப்படும் அதிகூடிய புலமைப் பரிசில் தொகை ஒரு இலட்சம் (100,000/) ரூபாவாகும்.
- ✦ புலமைப் பரிசிலுக்கு உரிமை பெறும் ஊடகவியலாளர்களுக்கு கற்கை நெறிகளுக்கான கட்டணத்தின் 50% தை கற்கை நெறியின் ஆரம்பத்தில் முதலாவது தவணைக் கட்டணமாகவும் மீதி 50% வீதத்தின் 25% கற்கை நெறியின் இரண்டாவது தவணைக் கட்டணமாகவும் மீதி 25% கற்கை நெறியை பூர்த்தி செய்த பின் சான்றிதழை சமர்ப்பித்த பின்பும் செலுத்தப்படும்.

### 05. தெரிவு செய்யப்படும் முறை

- ✦ நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளர் அவர்களால் நியமிக்கப்பட்ட தெரிவுக்குழு மூலம் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு, நன்மைபெறுநர் தெரிவு செய்யப்படுவர். தெரிவு செய்வது தொடர்பான இறுதித் தீர்மானத்தை அமைச்சின் செயலாளர் தன்னகத்தே கொண்டுள்ளார்.

### 06. விண்ணப்பிக்கும் முறை

- ✦ கீழ்க்காணும் மாதிரி விண்ணப்பப் படிவத்தின்படி பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 2018.07.16ஆந் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பணிப்பாளர் (ஊடகம்), நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு, இல. 163, கிருளபனை மாவத்தை, பொல்ஹேன்கொட, கொழும்பு-05 என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்ப வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''அசிதிசி ஊடக புலமைப் பரிசில் செயற்றிட்டம் - 2018'' எனத் தெளிவாகக் குறிக்கப்பட வேண்டும்.

**கவனிக்கவும்**

புலமைப்பரிசில் வழங்கப்பட்ட பின் அமைச்சுடன் ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட வேண்டியதுடன் தொடர்புற்ற கற்கை நெறியை ஆகக் கூடியது 6 மாதங்களினுள் ஆரம்பிக்க வேண்டும். இல்லாவிடில் புலமைப்பரிசிலை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

**தொடர்புகள் : 0112513645, 0112513459, 0112513460**

**மேலதிக விபரங்களுக்கு : www.media.gov.lk**

**கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க,**

**செயலாளர்,**

**நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு.**

# அசிதிசி ஊடக புலமைப்பரிசில் செயற்றிட்டம் - 2018
## நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு

1. முழுப்பெயர் தமிழில் (திரு/திருமதி/செல்வி) : ...........................
2. முழுப் பெயர் ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில் : ...........................
3. முதலெழுத்துக்களுடன் பெயர் : ...........................
4. விலாசம்: (தமிழில்) : ...........................
   விலாசம்: (ஆங்கிலத்தில்) : ...........................
5. தொலைபேசி இலக்கம் : கையடக்க : ........................... வீடு : ...........................
6. பிறந்த திகதி : ...........................
7. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் திகதியில் வயது: வருடம் : ............ மாதம் : ............ நாட்கள் : ............
8. தேசிய அடையாள அட்டை இல : ...........................
9. பெற்றுள்ள உயர் கல்வித் தகைமைகள் : ...........................
10. விண்ணப்பிக்கும் பயிற்சி கற்கை நெறியின் விபரங்கள் :
    - i. கற்கை நெறியின் பெயர் : ...........................
    - ii. பயிற்சி நிறுவனம் : ...........................
    - iii. கால எல்லை : ...........................
    - iv. கற்கை நெறிக்கான கட்டணம் : ...........................
11. குறித்த நிறுவனத்தினால் கற்கை நெறிக்கான தகைமை பெற்றிருப்பதாக அறிவித்து உங்களுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தை நேர்முகப் பரீட்சை சபையிடம் சமர்ப்பிக்க முடியுமா?

    முடியும் ☐ முடியாது ☐
12. அரசாங்கத்தினால் வழங்கப்படும் வேறு பயிற்சி செயற்றிட்டங்களின் கீழ் பணம் மூலமான மானியங்களைப் பெற்றதுண்டா?

| கற்கை நெறியின் பெயர் | நிறுவனம் | கால எல்லை |
|---|---|---|
| ........................... | ........................... | ........................... |

13. சேவை விபரங்கள்
    - தொழில் நிலை : நிரந்தரம் ☐ தற்காலிக ☐ பிரதேச ☐ சுதந்திர ☐ வெப் ☐
    - பதவி : ...........................
    - கடமையாற்றும் நிறுவனத்தின் பெயர் : ...........................
    - பத்திரிகை/ அலைவரிசை : ...........................
    - முகவரி : ...........................
    - தொலைபேசி இல : அலுவலகம் ........................... தொலைநகல்: ...........................
    - மின்னஞ்சல் முகவரி : ...........................
    - தகவல் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அடையாள அட்டையின் இலக்கம் : ........................... வருடம் : ...........................
    - தொழில் அனுபவம் (வருடங்கள்) : ...........................
    - உள்ளடங்கும் மாவட்டம் : ...........................
14. இதன் முன் இந்தப் புலமைப்பரிசில் உதவியின் கீழ் பண உதவிகள் பெற்றதுண்டா? ஆம் ☐ இல்லை ☐

    பெற்றிருக்கிறீர்களானால், கற்கைநெறி மற்றும் வருடம் : ...........................

மேல் குறிக்கப்பட்ட தகவல்கள் உண்மையானதும், சரியானதும் என அத்தாட்சிப்படுத்துகிறேன்.

திகதி ........................... விண்ணப்பதாரரின் கையொப்பம் ...........................

---

## நிறுவனத் தலைவரின் சிபாரிசு

திரு / திருமதி / செல்வி: ........................... எமது நிறுவனத்தில் முழுநேர / பகுதி நேர / சுதந்திர / பிரதேச / வெப் ஊடகவியலாளராக ........................... முதல் ........................... வரை சேவையாற்றுவதாகவும், மேற்கூறப்பட்ட புலமைப் பரிசில் உதவி பெறுவதற்குத் தகைமையுடையவரெனவும் சிபாரிசு செய்கிறேன். இங்கு குறிக்கப்பட்ட தகவல்கள் உண்மையானதும் சரியானதுமென அத்தாட்சிப்படுத்துகிறேன்.

1. பெயர் : ...........................
2. பதவி : ...........................
3. முகவரி : ...........................
4. தொலைபேசி இல : ...........................

...........................

திகதி ........................... உத்தியோகபூர்வ முத்திரை, கையொப்பம்